# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2027/4 - 2017 ජූලි මස 10 වැනි සඳුදා - 2017.07.10

*2027/4 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனம்**

*2014 ஆம் ஆண்டின 28 ஆம் இலக்க போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகள் (Rules)சட்டத்தின் 7(4)ஆம் பிரிவின் பிரகாரம் பிரகடனப்படுத்தப்படுதல்.*

*2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் பிரகாரம் அக்கூட்டுத்தாபனத்தின் 2015-05-15 ஆந் திகதி நடாத்தப்பட்ட உறுப்பினர்களது பொதுச்சபை கூட்டத்தில் ஆக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட விதிகள் இதனகத்துக் கீழ் தரப்பட்டுள்ளதென்பது அறிவிக்கப்படுகின்றது.*

*(2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார (கூட்டிணைத்தல்)சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.)*

Rules made by its members at the General Meeting held on18th May *2015*

*2015 மே மாதம் 15 ஆந் திகதி உறுப்பினர்களுக்கான பொதுச்சபை கூட்டத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட விதிகள்*

**போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனம்**

"போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம்" (கூட்டிணைத்தல் சட்டம்)

(வலிந்துதவ சமூகசேவை ஒழுங்கமைப்பு)

**விதிகள்** (Rules)

(01) இக்கூட்டுத்தாபனானது (1) "2014 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் மற்றும் 1980ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க வலிந்துதவு சமூக சேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டம் ஆகிய சட்டங்களில் உள்ளடங்கியுள்ள கருத்தெல்லைகளுக்கு ஏற்புடையதான வகையில் செயற்படும்.

(02) (அ) போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனமானது அக்கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களைக் கொண்டு அமைந்திருக்கும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் இலாப நோக்கத்துடன் பணியாற்றமாட்டார்கள்.


1A - PG 3600 — 107 (2017/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(03) கூட்டுத்தாபனமானது இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் கருத்து, பிறந்த இடம் அல்லது அத்தகைய வேறு விடயங்களைப் பொருட்படுத்தாது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும்.

**அங்கத்துவம் :**

4. (அ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து உறுப்பினர்களும் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சமூகசேவை குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்காக பணியாற்றுவர் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் அனைத்து உறுப்பினர்களும் சமூகசேவை வழங்கலை- சமூக சேவையில் ஈடுபடுதலை நோக்காகக் கொண்ட - சமூக சேவைமீது பற்றுறுதியுடையவர்களாவர் ;

(இ) மேற்படி (அ) மற்றும் (ஆ) என்பவற்றில் குறிப்பிடப்படுகின்ற தகைமைகளைப் பூர்த்தி செய்கின்றவர்கள் கீழே தரப்பட்டுள்ள உறுப்பினர் வகைகளின் கீழ் தொழிற்பாட்டுச் சபையின் விதப்புரையோடு பொதுக் கூட்டத்தில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களது பெயரிடாப்பொன்று பேணிச் செல்லப்படும்.

5. உறுப்பினர்களை வகைப்படுத்துதல்

i. பிரதான உறுப்பினர்
கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகர் மற்றும் ஆரம்ப உறுப்பினர் வண. ஊவதென்னே சுமன மகா தேரோ ஆவர்.

ii. ஆரம்ப உறுப்பினர்கள் :
கூட்டுத்தாபனத்தை கூட்டிணைப்பதற்காக பங்களிப்பு நல்கிய உறுப்பினர்கள் ஆரம்ப உறுப்பினர்களாவார்கள்.

iii. கௌரவ உறுப்பினகள் :

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளுக்காக உதவி வழங்கக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட நபர்களுக்கும் அமைப்புகளுக்கும் தொழிற்பாட்டுச் சபையின் விதப்புரையோடு பொதுக்கூட்டமொன்றில் கௌரவ அங்கத்துவம் வழங்கப்படலாமென்பதோடு அவ்வாறு அங்கத்துவம் பெறுகின்ற உறுப்பினர்கள் கௌரவ உறுப்பினர்களாக அமைவார்கள். கௌரவ உறுப்பினர்கள் பொதுச் சபைக் கூட்டத்தில் வாக்களிப்பதற்கு உரித்துப்பெற மாட்டார்கள்.

iv. வாழ்நாள் உறுப்பினர்கள் :

தொழிற்பாட்டுச் சபையின் விதப்புரையோடு பொதுக் கூட்டமொன்றில் ஆரம்ப உறுப்பினர்கள் அல்லது அமைப்புக்கள் அல்லது அவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு வாழ்நாள் அங்கத்துவம் பெற்றுக் கொடுக்கப்படலாம். அல்லது வாழ்நாள் அங்கத்துவம் பெறுகின்ற உறுப்பினர்கள் வாழ்நாள் உறுப்பினர்களாக அமைவார்கள்.

v. இணைந்த அமைப்புகளுக்கான உறுப்பினர்கள்
கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் முகமாக கூட்டுத்தாபனமானது இணைந்த அமைப்புகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதோடு கூட்டுத்தாபனத்தின் கீழ் அவ்வாறு தாபிக்கப்படுகின்ற இணைந்த தொழிற்சார் அமைப்புகளுக்கு பொதுச்சபையில் ஓர் அங்கத்துவம் வீதம் உரித்தாகும். பொதுச்சபையில் அவர்கள் வாக்களிக்க முடியும்.

6. அங்கத்துவத்தினை எதிர்பார்க்கின்ற அமைப்புகள் அல்லது நபர்கள் அங்கத்துவத்திற்கான தமது விண்ணப்பத்தினை முறையான அங்கத்துவ விண்ணப்பபடிவமொன்றின் மூலம் மேற்கொள்ளுதல் வேண்டும். அதன் பொருட்டு தொழிற்பாட்டுச் சயின் விதப்புரையோடு பொதுக் கூட்டமொன்றில் அங்கத்துவம் பெற்றுக்கொடுக்கப்படுதல் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் அங்கத்துவக் கட்டணம் செலுத்தி அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

7. வருடாந்த அங்கத்துவக்கட்டணம் 1,000 ரூபா என்பதோடு இணைந்த அமைப்புகளுக்கான கட்டணம் 5,000 ரூபாவாகும். அங்கத்துவம் இரத்தாகுதல் அல்லது அங்கத்துவத்திலிருந்து விலகுதல் காரணமாக அங்கத்துவ பணம்மீளச் செலுத்தப்படமாட்டாது.

8. அங்கத்துவம் இரத்துச் செய்யப்படுதல்.

(அ) உறுப்பினரின் மரணம் அல்லது இராஜினமா மூலம் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் சட்ட திட்டங்களுக்கு முரணாக செயற்படுதல் காரணமாக தலைவரின் அல்லது தொழிற்பாட்டுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் அங்கத்துவம் இரத்துச் செய்யப்பட்டு பொதுச்சபையில் அத் தீர்மானம் நிறைவேற்றப் படுவதன் மூலம் ;

(இ) உளரீதியான பாதிப்பு அல்லது கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களுக்கு முரணாக செயற்படுதல் காரணமக உறுப்பினரொருவரின் அங்கத்துவமானது தொழிற்பாட்டுச் சபையின் விதப்புரையோடு பொதுச்சபை கூட்டமொன்றில் அங்கத்துவம் இரத்துச்செய்யப்பட்டு அங்கத்துவத்திலிருந்து நீக்கப்படுவதன் மூலம் அங்கத்துவம் இரத்தாகும்.

**நிறுவனக் கட்டமைப்பு**

9. தலைவர், கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகர் மற்றும் ஆரம்ப உறுப்பினர் வண. ஊவதென்னே சுமன மகா தேரோ என்பது ஏற்றுக் கொள்ளபடுகின்றது.

10. கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகர்- மற்றும் ஆரம்ப உறுப்பினர் (தலைவர்) வண.ஊவதென்னே சுமன மகா தேரர் அவர்களின் தலைமைத்துவமானது வாழ்நாள் தலைமைத்துவமாக அமையும்.

11. நிதமும் வண. ஊவதென்னே சுமன தேரர் அவர்களின் புரவர்தன்மைக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

12. சிரேஸ்ட பிரதித் தலைவர் :

தொழிற்பாட்டுச் சபைக்காக பொதுச் சபையிலிருந்து தெரிவு செய்யப்பட்டுள்ள உப தலைவரொருவர் தலைவரின் விதப்புரையின் மீது தொழிற்பாட்டுச் சபையின் சிரேஸ்ட உப தலைவராக நியமிக்கப்படலாம்.

13. பிரதித் தலைவர்.

உப தலைவர் பதவிக்காக ஒரு உறுப்பினர் பொதுச் சபையில் தெரிவு செய்யப்படுதல் வேண்டும்.

14. பொதுச்செயலாளர் :

செயலாளர் பதவிக்காக பொதுச்சபையில் உறுப்பினரொருவர் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். அவர் தொழிற்பாட்டுச் சபையின் செயலாளராகவும் இருப்பார். உறுப்பினர் பட்டியலை பேணிவருதல் அதனை இற்றைப்படுத்துதல் பொதுக் கூட்டத்தினைக் கூட்டுதல் மற்றும் தொழிற்பாட்டுச் சபை கூட்டங்களைக் கூட்டுதல் பொதுச் சபை கூட்ட அறிக்கைகள் என்பவற்றை தயாரித்தல், சம்பந்தப்பட்ட அறிக்கைகளை பொதுச் சபைக்கும் தொழிற்பாட்டுச் சபைக்கும் சமர்ப்பித்தல் என்பன செயலாளரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

15. பிரதிப் பொதுச்செயலாளர் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் பற்றிய பொதுச் செயலாளர்.

பிரதிப் பொதுச் செயலாளர் மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் பற்றிய பொதுச் செயலாளர் பதவிக்காக பொதுச்சபையில் உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். அவர் பொதுச் செயலாளரின் பணிகளுக்கு உதவி வழங்க வேண்டும். பொதுச் செயலாளரை பிரதிநிதித்துவம் செய்தல் வேண்டும். சர்வதேச நடவடிக்கைகளின் போது சகல இயைபாக்க நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப் படுதல் வேண்டும்.

16. பொருளாளர்.

மன்றத்தின் சொத்துக்கள் பற்றிய ஆவணங்கள் பொருளாளரது பொறுப்பில் இருத்தல் வேண்டும் வருடாந்த கணக்குகள் பொதுச் சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். மன்றத்திற்காக வங்கிக் கணக்குகளைப் பேணிவருதல் பணியாட்டொகுதி மூலமாகவும் கணக்காளர் மூலமாகவும் பணிகளை நிறைவேற்றிக் கொள்ளுதல் மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்பார்வை செய்யப்படுதல் வேண்டும்.

17. சட்ட ஆலோசகர்

மன்றத்தின் சட்ட நடவடிக்கைகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுதல் வேண்டும்.

**தொழிற்பாட்டுச் சபை அல்லது நிருவாகச் சபை**

18. தொழிற்பாட்டுச் சபை அல்லது நிர்வாகச் சபை

கூட்டுத்தாபனத்தை முகாமைத்துவம்செய்தல் நிருவாகம் செய்தல் என்பன தொழிற்பாட்டுச் சபையின் பொறுப்பு என்பதோடு நிதியங்களை நிருவகிப்பதும் தொழிற்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தொழிற்பாட்டுச் சபையினது தலைவர், சிரேஷ்ட பிரதித் தலைவர், பிரதித் தலைவர், பொதுச் செயலாளர், பிதிப் பொதுச் செயலாளர்,மற்றும் சர்வதேச நடவடிக்கைகள் பற்றிய பொதுச் செயலாளர்,பொருளாளர், சட்ட ஆலோசகர் ஆகியோரை உள்ளிட்ட ஏமு உறுப்பினர்களைக் கொண்டு அமைந்திருக்கும் தொழிற்பாட்டுச் சபையின் பிரதானியாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் இருப்பார்.

19. தொழிற்பாட்டுச் சபையின் பதவிக் காலமானது மூன்று வருடங்களாகும்.

20. பதவிக்காலம் முடிவடைந்துள்ள உறுப்பினர்களுக்கும் மீண்டும் நியமனம் பெறுவதற்கான தகுதி உள்ளது.

21. குழுவிற்காக ஆகக் குறைந்தது 02 பெண் பிரதிநிதிகள் நியமிக்கப் படுதல் வேண்டும்.

22. கூட்டுத்தாபனத்தின் மற்றும் தொழிற்பாட்டுச் சபையின் உறுப்பினர் ஒருவர் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் ஒழுக்க நெறிக்கு முரணான காரணங்களின் அடிப்படையில் நீக்கப்படுவதற்கு தேவையேற்படும் பட்சத்தில் நிருவாக ஒழுக்க கட்டுப்பாட்டு மற்றும் நலனோம்பல் விதப்புரையின் அடிப்படையில்தொழிற்பாட்டுச் சபையின் தற்றுணிவுடன் அது மேற்கொள்ளப் படலாம்.

23. (அ) தொழிற்பாட்டுச் சபை நிருமாணிக்கப் பட்டதன் பின்னர் ஒரு குழு உறுப்பினர் சட்டத்தின் 5(3) (அ) வில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலகும் பட்சத்தில் அவருக்குப் பதிலாக பிறிதொருவர் நியமிக்கப் படலாம்.

(ஆ) அந்த நபரின் பதவிக்காலமானது எஞ்சியுள்ள காலப்பகுதிக்காக மட்டும் செல்லுபடியானதாக அமையும்.

24. தொழிற்பாட்டுச் சபையில் உள்ளடக்க வேண்டிய உறுப்பனர்களின் எண்ணிக்கை திருத்தப்படும் பட்சத்தில் அது பொதுச்சபையில் தீர்மானிக்கப்படும்.

25. கூட்டுத்தாபனத்தின் நோக்கங்கள் செயற்பாடுகள் சம்பந்தப்பட்ட சகல தீர்மானங்களும் தொழிற்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப் படும்.

26. கூட்டுத்தாபனத்தின் தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துமுகமாக நிதமும் தொழிற்பாட்டுச் சபை கூடும்.

27. தொழிற்பாட்டுச் சபையில் மேற்கொள்ளப்படுகின்ற நியமனங்கள் யாவும் அதன் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னரே அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படும்.

28. தொழிற்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களை அங்கீகரிப்பது அல்லது நிராகரிப்பது சம்பந்தப்பட்ட அதிகாரத்தினை தொழிற்பாட்டுச் சபையின் தலைவர் கொண்டிருப்பார்.

29. தொழிற்பாட்டுச் சபைக்கு அதன் அதிகாரங்களை வேறு தரப்பொன்றிற்கு சாட்டவோ நீக்கவோ செய்யமுடியும்.

30. சபையினால் விதப்புரை செய்யப்படுகின்ற முன்மொழிவுகள் தொழிற்பாட்டுச் சபையினால் ஆராய்ந்து பார்க்கப்பட்டதன் பின்னர் தேவைப்படும் பட்சத்தில் பொருத்தமான திருத்தங்களோடு அங்கீகாரத்தின் பொருட்டு தொழிற்பாட்டுச் சபையின் தலைவருக்குச் சமர்ப்பிக்கப் படும்.

31. கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக அலுவலகமொன்று தொழிற்பாட்டுச் சபையினால் பேணப்படும்.

32. கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக தொழிற்பாட்டுச் சபையிடமிருந்து சம்பளம் பெறுகின்ற பிரதான நிறைவேற்று அதிகாரியொருவர் மற்றும் பணியாட்டொகுதி நியமிக்கப்படும்.

33. தொழிற்பாட்டுச் சபையினால் கூட்டுத்தாபனத்தின் நடவடிககைகளை முன்னெடுத்தச் செல்வதற்காகவும் தொழிற்பாட்டுச் சபையின் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்காகவும் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பணியாட்டொகுதி என்போரால் பின்பற்ற வேண்டிய பணிக்கேகோவையொன்று தயரிக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப் படும்.

34. சட்டத்தின் 6(ஊ) இல் குறிப்பிடப் பட்டுள்ள வகையில் பணியாட்டொகுதிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்று ஏற்புடையதாக அமைகின்ற சகல அளவுகோள்களும் ஊழியர் கட்டமைப்பும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையும் தொழிற்பாட்டுச் சபையினால் தீர்மானிக்கப்படும்.

35. சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் சகல நடவடிக்கைகளுக்குமான நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் என்பன தொழிற்பாட்டுச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

36. பணியாட்டொகுதியினையும் அலுவலகத்தையும் பேணிச் செல்வதற்குத் தேவையான நிதி தொழிற்பாட்டுச் சபையினால் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலவிடப்படும்.

37. கூட்டுத்தாபனத்தின் தலைவரது மரணத்தின் மூலம் வெறிதாகின்ற தலைவர் பதவிக்காக சிரேஷ்ட பிரதித்தலைவர் நியமனம் பெறுதல் வேண்டும். அவ்வாறு நியமனம் பெறுகின்ற தலைவரால் தொழிற்பாட்டுச் சபையானது நெறிப்படுத்தப்படும். அவரது பதிக்காலமானது எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு மட்டும் செல்லுபடியானதாக அமையும். பொதுக்கூட்டத்தில் அவர் தலைவர் பதவிக்காக உறுப்பினர்களின் விருப்பத்தோடு மீண்டும் தெரிவு செய்யப் படலாம்.

**துணைக் குழுக்கள்**

38 (அ) தொழிற்பாட்டுச் சபையினால் முகாமைத்துவ தேவைப்பாடுகளின் அடிப்படையில் பின்வரும் துணைக்குழுக்களுக்காக பொதுச் சபையின் உறுப்பினர்கள் துணைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்படலாம்.

1. நிதி மற்றும் நிதித் திரட்டல் குழு.
2. முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக குழு.
3. நிருவாகம் ஒழுக்கக்கட்டுப்பாடு மற்றும் நலனோம்பல் குழு.
4. கல்வி, பயிற்சி, சர்வதேச தொடர்புகள் மற்றும் விஷேட அலுவல்கள் குழு.
5. பிரச்சாரம் , ஊடக நடவடிக்கைகள், அனுசரனைக் குழு.

(ஆ) ஒரு துணைக் குழுவானது 5 உறுப்பினர்களைக் கொண்டு அமைந்திருக்கும். கௌரவ உறுப்பினர்களைத் தவிர்ந்த ஏனைய எந்த ஒரு உறுப்பினரும் துணைக் குழுவிற்கு நியமிக்கப் படலாம்.

**ஒருங்கிணைந்த அமைப்புக்கள்**

39. சட்டத்தின் 3(1) இன் கீழ் கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப்பட்டதற்கான பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளுவதன் பொருட்டு கூட்டுத்தாபனமானது ஒருங்கிணைந்த அமைப்புகளைத் தாபித்து நடைமுறைப் படுத்தும்.

40. கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப் படுத்தப்படுகின்ற பின்வரும் தொழிற்சார் அமைப்புக்கள் ஒருங்கிணைந்த அமைப்புகளாக ஏற்றுக்கொள்ளப்படும்.

தேசப்பற்றுள்ள தேசிய சக்தி.
தேசப்பற்றுள்ள நடமாடும் வர்த்தகர்களின் தேசிய அமைப்பு
தேசப்பற்றுள்ள நடைபாதை வர்த்தகர்களின் தேசிய அமைப்பு.
தேசப்பற்றுள்ள முச்சக்கர வண்டி கைத்தொழிலாளர்களின் தேசிய அமைப்பு.
தேசப்பற்றுள்ள சாரதிகள் மற்றும் நடத்துனர்களின் தேசிய அமைப்பு
தேசப்பற்றுள்ள பேரூந்து உரிமையாளர்களின் தேசிய அமைப்பு.
தேசப்பற்றுள்ள திரிய மகளிர் தேசிய அமைப்பு.
தேசப்பற்றுள்ள சுற்றாடல் கற்கை மையம்.
தேசப்பற்றுள்ள பயிலுனர் கலைஞர்களின் மன்றம்.
தேசப்பற்றுள்ள இளைஞர் சக்தி
தேசப்பற்றுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தக ஒன்றியம்.

41. சட்டத்தின் 3(1) இன் கீழ் கூட்டுத்தாபனம் கூட்டிணைக்கப் பட்டதற்கான பொதுக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளுவதன் பொருட்டு கூட்டுத்தாபனத்தினால் பங்காளர் அமைப்புக்கள் உருவாக்கப்படுதல் மற்றும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுதல் மேற்கொள்ளப்படும்.

**கூட்டுத்தாபனத்தின் நிதியம்**

42. சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டுத்தாபனமானது நிதியமொன்றை பேணிச் செல்லும்.

43. (அ) கூட்டுத்தாபனம் சரி தொழிற்பாட்டுச்சபையினால் நிதி திரட்டிக் கொள்ளப்படும். அவ்வாறு திரட்டிக்கொள்ளப்படுகின்ற சகலவிதமான நிதிகள் மற்றும் கொடைகள் கூட்டுத்தாபன நிதியமாக அமையும்.

(ஆ) கீழே தரப்பட்டுள்ள முறையில் நிதிகளைத் திரட்டிக்கொள்ளலாம்.

* சந்தாப் பணம் உறுப்பினர் கட்டணம் பங்களிப்பு தொகை கட்டணங்கள் அல்லது நன்கொடைகள் அல்லது கொடைகள் என்ற வகையில் கிடைக்கப்படும் பணம்.
* கூட்டுத்தாபனத்தின் முதலீடுகள் மீதான வருமானம்.
* உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு உதவிகள்.
* அரசாங்க நிதி ஏற்பாடுகள்.
* உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்.
* நுன்நிதி வைப்பீட்டு நிதியம்.

**நிதி முகாமைத்துவம்**

44. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியத்தை நிருவாகம் செய்வதாவது தொழிற்பாட்டுச் சபையின் பிரதானி மற்றும் தொழிற்பாட்டுச் சபை என்பவற்றினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஆ) கூட்டுத்தாபனம் சார்பாக திரட்டிக்கொள்ளப்படுகின்ற சகல நிதிகளும் கூட்டுத்தாபனத்தின் நிதியத்தின் வரவு வைத்து ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கிகளில் மன்றத்தின் பெயரில் பேணப்பட்டு வருகின்ற கணக்குகளில் வைப்புச் செய்யப் படுதல்;

(இ) கூட்டுத்தாபனத்தின் பெயரில் பேணப்பட்டு வருகின்ற வங்கிக் கணக்குகளை ஆரம்பித்தல், கணக்குகளை மூடி விடுதல் மற்றும் கணக்கிலிடப்பட்டுள்ள பணத்தை பரிமாற்றம் செய்தல் என்பன தொழிற்பாட்டுச் சபையின் முன் மூட்டிய பேரில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதியானது கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக சட்டத்தின் 6 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளின் நிமித்தம் தொழிற்பாட்டுச்சபையினால் செலவிடப்படும் .

45. (அ) கூட்டுத்தாபனத்தின் நிதியத்திறகான சகல வங்கிக் கணக்குகளினதும் அடிப்படையில் பணம் மீளப் பெறுதல் காசோலைகளை ஒப்பமிடுதல் சம்பந்தப்பட்ட சகல வகையிலுமான கொடுக்கல்-வாங்கல்கள் தொழிற்பாட்டுச் சபையின் பிரதானி மற்றும் பொருளாளர் என்போர்களது ஒப்பங்களுடன் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் ;

(ஆ) சகல கொடுப்பனவுகளும் தலைவரின் அங்கீகாரத்திற்கு உட்படுதல் வேண்டும்;

(இ) பதவியணியின் பராமிப்பு நடவடிக்கைகள் மற்றும் அலுவலகத்தினைப் பேணுதல் என்பவற்றுக்காக தேவைப்படுகின்ற பணமானது கூட்டுத்தாபனத்தின் பிரதான நிதியத்திலிருந்து பெற்றுக்கொள்வதானது தலைவரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் நிதி ஆண்டானது ஒவ்வொரு வருடமும் சனவரி 1ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரையாக அமையும்.

(உ) கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு செய்யப்பட்டவருடாந்த இறுதிக் கணக்கு அறிக்கை பொருளாளரினால் பொதுச்சபைக்கு சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஊ) கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நிதி நடவடிக்கைகளை இலகுபடுத்தும் மூலமாக நிதிப் பிரமாணக் குறிப்பொன்று தொழிற்பாட்டுச் சனையினால் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

(எ) நிதிக் கொடையளிப்பு நிறுவனங்களினால் பெற்றுத்தரப்படும் நிதியை தேவைக்கேற்ப கணக்கிலிடுவதற்கும் வங்கிக் கணக்குகளை பேணிச் செல்வதற்கும் மன்றத்தினால் முடியும்.

(ஏ) கூட்டுத்தாபனத்தின் தேவைக்கேற்ப விசேட ஒதுக்க நிதியங்களை பேணிச்செல்வதற்கும் வங்கிக் கணக்குகளை பேணிச் செல்வதற்கும் மன்றத்தினர் முடியும்.

**தேர்தல்**

46. கூட்டுத்தாபனமானது வருடாந்த பொதுச்சபை கூட்டமொன்றை நடாத்தும்.

47. வருடாந்த பொதுச்சபை கூட்டத்தில் அக்கூட்டுத்தாபனத்தின் சகல தொழிற்பாட்டுச் சபை பிரதிநிதிகளும் துணைக்குழு உறுப்பினர்களும் நியமிக்கப்படுதல் வேண்டும்.

48. தொழிற்பாட்டுச் சபையின் விதப்புரையின் மீது புரவலர்களும் அனுசரனையாளர்களும் பெயரிடப்படுதல் வேண்டும்.

49. கூட்டுத்தாபனத்தின் சகல விதிகளும் உறுப்பினர்களின் பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களுககு மத்தியில் 3/2 பெரும்பான்மை விருப்பத்தின் அடிப்படையில் இயற்றப்படும்.

50 கூட்டுத்தாபனத்தின் பொருட்டு இயற்றப்பட்ட விதிகளை இரத்துச்செய்தல் நிறுத்துதல் மாற்றியமைத்தல் அல்லது சேர்க்கப்படுதல் பொதுச்சபைக் கூட்டமொன்றில் பங்கேற்றுள்ள உறுப்பினர்களுள் 2/3 பெரும்பான்மை அல்லது அதற்கு மேற்பட்டவர்களது வாக்கின் மூலம் மட்டும் நிறைவேற்றப் படமுடியும்.

51. பொதுச்சபைக்கான கூட்ட நடப்பெண் உறுப்பினர்களுள் 1/3 ஆக அமைதல் வேண்டும்.

52. கௌரவ உறுப்பினர்களைத் தவிர்ந்த அங்கத்துவம் பெற்றுள்ள ஏனைய சகல உறுப்பினர்களும் வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தில் ஒரு வாக்கினைப்பயன்படுவதற்கு உரிமை கொண்டுள்ளனர்.

53. கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையானது வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்கு சிரேஷ்ட பிரதித் தலைவரால் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

**பொது இலச்சினை.**

54. (அ) கூட்டுத்தாபனமானது ஒரு பொது இலச்சினையைக் கொண்டிருக்கும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் பொது இலச்சினையானது தொழிற்பாட்டுச் சபையின் இரண்டு உறுப்பினரது முன்னிலையில் பதிக்கப்படுவது செல்லுபடியானதாக அமையும் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பொது இலச்சினையானது நிதமும் தொழிற்பாட்டுச் சபையின் உறுப்பினரொருவரின் பொருப்பிலிருத்தல் வேண்டும்.

**பொதுச்சபைக் கூட்டம்**

55. (அ) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்கு ஒரு தடவையேனும் கூடுதல் வேண்டும்.

(ஆ) நிருவாகக் குழு உறுப்பினர்களுள் 1/3 உறுப்பினர்களது எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றை பிரதானியிடம் அல்லதுதொழிற்பாட்டுச் சபையிடம் சமர்ப்பிப்பதன் மூலம் பொதுச்சபை கூட்டமொன்றை கூட்ட முடியும்.

(இ) (i) கூட்டுத்தாபனத்தின் பொதுச்சபைக் கூட்டமொன்றைக் கூட்டுவதற்கான எழுத்து மூலமான அறிவித்தல் மற்றும் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் என்பன ஏழு நாட்களிலான முன்னறிவித்தலுடன் தொழிற்பாட்டுச் சபையின் அங்கீகாரத்தோடு செயலாளரினால் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(ii) பொதுச் சபைக்கூட்டத்திற்கான அறிக்கைகளை தொழிற்பாட்டுச் சபையானது வைத்திருக்கும்.

(iii) பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் உறுப்பினர்களின் ஒப்பங்களுடனான பதிவேடொன்றை தொழிற்பாட்டுச் சபையானது வைத்திருக்கும்.

(ஈ) பொதுச் செயலாளர் பொதுச்சபை அறிக்கையினை தயாரித்தல் வேண்டும்.

**தொழிற்பாட்டுச்சபையின் அதிகாரங்கள் பொறுப்புகள் மற்றும் விடயப்பரப்பு**

56. கூட்டுத்தானம் சார்பாக கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவதற்காக தொழிற்பாட்டுச்சபை பணியாற்றும்.

57. தொழிற்பாட்டுச் சயின் பிரதானி கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகராகவும் ஆரம்ப உறுப்பினராகவும் இருப்பார்.

58. தொழிற்பாட்டுச் சபையின் பிரதானியினால் தொழிற்பாட்டுச் சபையானது வழிநடாத்தப்படும்.

59. (அ). தொழிற்பாட்டுச் சபையானது தேவையான அணைத்துச் சந்தர்ப்பங்களிலும் கூடும்.

(ஆ) தொழிற்பாட்டுச் சபையின் பிரதானியினால் ஏழு நாட்களிலான முன்னறிவித்தலுடன் எழுத்து மூலமாக தொழிற்பாட்டுச் சபையின் கூட்டமொன்றை கூட்டுவதற்கான அறிவித்தல் மற்றும் நிகழ்ச்சிநிரல் தொழிற்பாட்டுச்சபையின் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

(இ) தொழிற்பாட்டுச்சபைக் கூட்டங்களுக்கான அறிக்கைகள் சேகரித்து வைக்கப்படும்.

60. தொழிற்பாட்டுச் சபையின் பிரதானியினால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் விடயங்கள் தொழிற்பாட்டுச் சபையின் அந்தந்த உறுப்பினருக்குக் காட்டப்படல் மீளப் பெறப்படுதல் திருத்தப்படுதல்,மாற்றப்படுதல் மற்றும் அத்துடன் இடை நேர்வினையான வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

61.(அ) தொழிற்பாட்டுச் சபையினால் தீர்மாணிக்கப்படும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றிற்காகவும் பதவியணியொன்று நியமிக்கப்படும்.

(ஆ) தொழிற்பாட்டுச் சபையினால் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினரகள் மன்றத்தின் பதவியணிக்கு நியமிக்கப்படலாம்.

62. கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப் படுத்துகின்ற சமூக சேவைக் கருத்திட்டங்கள் சமூக சேவைகள் மற்றும் அத்துடன் இடைநேர்வினைவான சேவைகள் என்பவற்றுக்காக தொழிற்பாட்டுச் சபையினால் கூட்டுத்தாபனத்தின் நிதி செலவிடப்படும்.

63.(அ) கூட்டுதாபனம் சார்பாக அனுசரணையாளர்கள் மற்றும் புரவலர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கூட்டுத்தாபனத்துடன் இணைப்பாக்கம் செய்யப்படுவார்கள்.

(ஆ) புரவலர் மற்றும் அனுசரணையாளர்களுக்கு கௌரவ உறுப்பினர் பதவி பெற்றுக்கொடுக்கப்படுவதற்கான தேவையேற்படும் பட்சத்தில் அதன் பொருட்டு விதப்புரைகள் பொதுச் சபைக்கு சமர்ப்பிக்க முடியும்.

64. தலைமையகத்தை பேணிச் செல்வதற்கான செலவினங்கள் மற்றும் பதவியணியினைப் பேணிச்செல்வதற்கான செலவினங்கள் தொடர்பாக தொழிற்பாட்டுச் சபையினால் தீர்மாணிக்கப்படும்.

65. (அ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொழிற்பாட்டுச்சபையினால் முகாமை மற்றும் நிருவாகம் செய்யப்படும்.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்துக்கள் தொழிற்பாட்டுச் சபையினால் பாதுகாக்கப்படும்

66. கூட்டுத்தாபனத்தின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் இதர கொடுக்கல் வாங்கல்கள் என்பவற்றிற்கு உரியதாக சரியான கணக்குகள் தொழிற்பாட்டுச் சபையினால் பேணிச்செல்லப்படும்.

67. கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் போதிராஜாரம மன்றத்திற்கு உரியதாக அமைந்திருந்த அணைத்துச் செயற்பாடுகளும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளும் அவ்வாறாகவே புதிய கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளாக மாறும்.

68. சட்டத்தின் 10 (1) (2) (3) (4)(a ) (b )பிரிவுகளுக்கு அமைவாக கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் கணக்காய்வு செய்யப் படுதல் வேண்டும்.

69.(அ) தொழிற்பாட்டுச் சபையானது கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்கான வருடாந்த அறிக்கையை தயாரித்தல் வேண்டும்.

(ஆ) அவ்வறிக்கையானது உறுப்பினர்களின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

70. கூட்டுத்தாபனத்தின் சகல உறுப்பினர்களும் நிதமும் இவ்விதிகளுக்கு கட்டுப்பட்டவர்களாவர்.

71. இவ்விதிகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்படும்.

72. சிங்கள, ஆங்கில, தமிழ் மொழிகளில் ஏற்படும் மொழிப் பிரச்சினையில் சிங்கள மொழியே மேலோங்கி நிற்றல்.

07-784

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.